PUBLIC SERVICES
INTERNATIONAL

*The global union federation of workers in public services*

TAMIL

சுருக்க உரை 5



5

# கார்ப்பரேட் வரியை நிர்ணயித்தல்

## வரிப் புகலிடத்தைப் பயன்படுத்துதலை நீக்க தொழிற் சங்க கோரிக்கை

# வரிப் புகலிடத்தைப் பயன்படுத்துதலைக் களைதல்

கார்ப்பரேட்களும் பணக்காரர்களும் பில்லியன் கணக்கில் வரிப் புகலிடத்திற்கு மாற்றி தொழிலாளர்களும் குடும்பமும் எதிர்பார்க்கும் பள்ளி, மருத்துவம் மற்றும் பிறவற்றிற்குத் தேவைப்படும் பொது வருவாயை வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்புகள் மூலம் குறைக்கின்றனர். வரிப் புகலிடம் ஏற்றத் தாழ்வுகளை அதிகரித்துத் தனியார் துறை ஊழியர்களது கூலியைக் குறைத்தது கார்ப்பரேட். அதற்கான காரணத்தைக் கார்ப்பரேட் கூறச் செய்ய தொழிற்சங்கம் போராடுகின்றது. உலகளாவிய தனியார் செல்வங்கள 8% வரிப் புகலிடத்தில் உள்ளது மற்றும் இது உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் 10% ஆகும்.

## சிக்கல்: பணத்தை மறைவிடமாகக் கடல்கடந்து .ஒளித்தல்

### முக்கியமான அம்சம்:

**தொழிற்சங்கங்கள் அரசுகளிடம் கோரவேண்டியவை:**

- **வரிப் புகலிடத்தில் .கட்டிய எல்லாவற்றிற்கும் அதிக அளவானக் கட்டப்படாத வரி விதிக்கவும்.**
- **வரிப் புகலிட முறையை முடிவுக்குக் கொண்டு வர உலகளாவிய ஆதரவு தேட முயல்க.**

கார்ப்பரேட் உலகில் பெரும் அளவில் வரியைத் தவிர்க்கும் அமெரிக்கக் கார்ப்பரேட்கள் தங்கள் லாபத்தில் பாதிக்கும் மேல் வரிப் புகலிடத்தில் வைத்துள்ளன[1] . சில வரிப் புகலிடங்கள் கிட்டத்தட்ட முழுமையாக நிதி ரகசியத்துக்கு என்று கொடுப்பதால் பெரும் பணக்காரர்கள் தங்கள் செல்வத்தைத் கணக்கில் காட்டாமல் மறைத்து விடுகின்றனர்.

வரிப் புகலிடமானது வரி அமைப்புக்கு ஓர் அறைகூவலாக இருக்கக் காரணம் கார்ப்பரேட்கள் மற்றும் பணக்காரர்கள் வரிகட்டும் சுழற்சி யிலிருந்து மற்றவர்களது செலவில் வெளியேறுகிறார்கள். இதனால் தொழிலாளர்களும் மற்றவர்களும் அதிகமாக வரி கட்டுகிறார்கள். அப்போதுதான் முக்கியமான பொதுப்பணிகளுக்கு நிதி கிடைக்கும்.

வரிப் புகலிட ரகசியமானது ஜனநாயகத்திற்கே ஓர் அச்சுறுத்தலாகக் காரணம் அரசியலிலும் தேர்தலிலும் கறைப் பணம் விளையாடுவதே. எடுத்துக்காட்டாக பாரடைஸ் பேப்பர்ஸ் பெட்டி மிகவும் வலது சாரியான வில்லியம் ராபர்ட் மெரிஸர் பெர்முடாவின் வரிப் புகலிடத்தை டோனால்ட் ட்ரம்ப்க்கு ஆதரவாக அமெரிக்கத் தேர்தலில் பல மில்லியன் டாலரைத் துணிவாகப் பயன்படுத்தினார் என்று வெளிப்படுத்தியது.

1 கேப்ரியல் ஜுக்மன் நாடுகளில் மறைந்துள்ள செல்வம் வரிப் புகலிடங்களது சவுக்கடி ஒளிவில்லை தொகுப்பு 2015.




# வரிப் புகலிடம் எவ்வாறு வேலை செய்கிறது?

வரிப் புகலிடமானது ஒரு நாடாகவோ ஒரு பிரதேசமாகவோ ஒரு நாட்டின் மாநிலமாகவோ இருக்கலாம். வரிப் புகலிடத்திற்காக உலகளவில் ஏற்கப்பட்ட ஒரு விளக்கம் இல்லை. ஆனால் அதன் இயல்புகளாவன: வெளிநாட்டிலிருந்து வரும் வருவாய்க்குக் குறைந்த பட்ச வரி விதிப்பு அல்லது வரிவிதித்தலே இன்மை. வரிப் புகலிடம் கொஞ்சமாக அல்லது கொஞ்சம்கூட பொருளாதார நடவடிக்கைகள் இருக்கவேண்டியதில்லை. அதற்கு ஈடாக வரியை அணுகவேண்டாம். மற்றும் பெரிதும் அசாத்தியமான இரகசியமானது. எடுத்துக்காட்டாக பல வரிப் புகலிடம்கொண்ட குழுமங்கள் தங்கள் கணக்கேடுகளை வெளியிடவும் முதலாளி யாரெனக் கூறவும் தேவையில்லை.

வரிப் புகலிடம் பல வடிவங்களிலும் அளவுகளிலும் வரும். தொட்டி வரிப் புகலிடத்தில் பணமும் சொத்துக்களும் இங்கிலாந்து வர்ஜின் தீவுகளில் மற்றும் கேமன் தீவுகளில் சேர்க்கப்படுகின்றன. வருவாய் கணக்கு ஏடுகளில் மட்டுமே இருக்கும். ரகசியம் பொது மக்களது பார்வையிலிருந்து அவற்றை மறைக்கும். ஊடகங்கள் அவ்வப்போது இந்த வரிப் புகலிடத் தீவுகளைக் காட்டினாலும் நடைமுறையில் பெரிய உலகளாவிய தொடர்பில் நாட்டுக்குள்ளும் கடல்கடந்தும் மாற்றுகின்றன. இதில் உலக நிதி மையங்களும் அடக்கம். கடல்கடந்த நிதியின் கருத்து என்னவென்றால் ஒரு வணிகச் செயல்பாட்டின் நகர்த்தப்படும் பகுதிகளை பௌதிகமாகவோ சட்ட பூர்வமாகவோ செயற்கையாகவோ வேறொரு எல்லைக்கு வணிகம் செய்யும் நாட்டின் வரிகள் விதிமுறைகள் மற்றும் பொறுப்புகளைத் தவிர்க்கவே.

குழாய் வரிப் புகலிடமானது தொட்டி வரிப் புகலிடத்திலிருந்து பணத்தை மூன்றாம் நாடுகளுக்குப்- பெரும்பாலும் சிறு நாடுகள் குழும உளது -வருவாய் மீது உள்நாட்டுச் சந்தைப்படி தொடர் வரி இடைவெளியைப் பிற இடங்களுக்குப் போகும் வருவாய்க்குத் தருகின்றன. பல குழுமங்கள் மிகப் பெரிய குழாய் வரிப் புகலிடங்களில் நெதர்லாந்து மற்றும் அயர்லாந்து, ஸ்விட்சர்லாந்து லக்சம்பர்க் சிங்கப்பூர் மற்றும் பல அவ்வாறு இயங்குகின்றன. அமெரிக்காவின் (குறிப்பிடும்படியாக டெலாவர்) அமெரிக்க மாநிலங்களுக்குள்ளயே வரிப் புகலிடம் உள்ளது. ஐஎம்எஃப் ஆய்வாளர்களது அண்மையக் கூற்றுப்படி கிட்டத்தட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 40% க்கு மேல் உலகளவில் போலி முதலீடாக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இந்த வரிப் புகலிடம் வழியாகச் செல்கின்றன


கடல்கடந்த பழக்கத்தை ஏற்படுத்திய இங்கிலாந்து அதனளவில் ஒரு சிறப்புடையது. க்ரௌன் டிபென்டன்ஸிஸ் எனப்படும் அதன் கடல்கடந்த வரிப் புகலிடம் ( ஜெர்ஸி உட்பட) பிரதேசங்களில் ( இங்கிலாந்து வர்ஜின் தீவுகள் கேமன் தீவுகள் மற்றும் பெர்முடா) எல்லாம் லண்டன் நகரின் துணைக் கோள்களாக இருந்து பணம், சொத்துகளை மாற்றுகின்றன. வரிநீதி நெட் வொர்க்(டாக்ஸ் ஜஸ்டிஸ் நெட்வொர்க்) இங்கிலாந்தை கார்ப்பரேட் வரி தவிர்க்க உலகளவில் உதவும் ஒன்றாகக் கருதுகிறது.

ஸ்விட்சர்லாந்து போன்ற சில பகுதி விலக்குகள் வரிப் புகலிடத்திலிருந்து பல வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் காரணம் நடைமுறையில் உற்பத்தி, விற்பனை அல்லது பணிபுரிவது எல்லாம் வெளியிடங்களில் நடப்பவை. கார்ப்பரேட்கள் மற்றும் பெரும் பணக்காரர்களது வரிப் புகலிடத்தால் பயன்பெறுவோர்- இந்த இடங்களில் அரிதாக உள்ளனர். வரிப் புகலிடத்தின் துணை நிறுவனங்கள் விரல்விட்டு எண்ணும் அளவே ஊழியர்கள் உள் நாட்டு விதிகளையொட்டி ஆனால் பெரிதும் அவை கணக்கு ஏடுகளில் தான் உள்ளன.

வரிப் புகலிட வணிக முறையானது கடைசியில் அயர்லாந்து ஸ்விட்சர்லாந்து நாட்டில்கூட அந்த நாட்டுப் பொருளாதாரம் மற்றும் அரசியலைப் பாதிக்கும் ஒரு பொருளியல் சான்றாக உள்ளது. நிதிச் சாபம் (தி ஃபைனான்ஸ் கர்ஸ்) எனும் புத்தகத்தில் நிதிப் பத்திரிகையாளர் நிக் ஷக்ஷுசோன் அயர்லாந்தின் பொருளாதார வளர்ச்சி வரிப் புகலிடமாக நெடுங்காலம் இருந்து எந்தத் தொடர்பும் இல்லை என்று விவரிக்கிறார்.

# வரிப் புகலிடம் வளர்ந்து வரும் வணிகம்:

**வளர்ந்துவரும் செல்வத்தின் ஒரு பகுதியானது கடல்கடந்த நிதி நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகிறது**




பன்னாட்டுக் குழுமங்கள் கணக்கு ஏடுகளில் தந்திரமாகத் தங்கள் லாபங்களை வரிப் புகலிடத்திற்கு மாற்றி நடைமுறையில் அவர்கள் உள்ள லாபம் ஈட்டும் நாட்டிலிருந்து வரும் வரி அறிவிப்பைக் குறைத்துக் கொள்வர். ( சுருக்க உரை 1 காண்க வரி நீதி ஒரே குழும வரி விதி) இத்தகைய நடவடிக்கைகள் பெரிதும் ஊடுருவ முயலாது காரணம் பன்னாட்டுக் குழுமங்கள் இத்தகைய நடவடிக்கைகள்பற்றிய தகவல்களைத் தெரிவிக்கத் தேவை இல்லை. ஆனால் உண்மையில் மறைக்கப்படுவதில்லை. எடுத்துக் காட்டாக பன்னாட்டுக் குழுமங்கள் பொதுவாகத் தங்களது துணைநிறுவனங்களைப் பட்டியலிடவேண்டும். வரிப் புகலிடத்தில் உள்ளவை உட்பட- ஆனால் அவற்றிலிருந்து பெறப்படும் ஒவ் வொன்றும் குறிப்பிடப்படவேண்டாம். (சுருக்க உரை 5 காண்க: நாடுதோறுமான பொது அறிக்கை).

பல நாடுகள் இத்தகைய நடவடிக்கைகளைக் கையாள வரிப் புகலிடத்திற்கு எதிரான சட்டங்களைக் கொண்டுள்ளன. அவற்றைக் கடைபிடித்தல் கடினம். ஏனெனில் தேசிய வரி நிர்வாகத்தால் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் ஒவ்வொரு நடவடிக்கையையும் சவாலாக எதிர்கொண்டு வரிச் சட்டங்களில் உள்ள குழப்பமான (அர்த்தப்படுத்தலில்) விளக்கங்களை பெரும் சம்பளம் பெறும் வழக்கறிஞர்கள் மற்றும் கணக்கீட்டாளர்களைக் கொண்டுள்ளன பன்னாட்டுக் குழுமங்கள் ( சுருக்க உரை 3 காண்க: வரித்துறையை வலுப்படுத்தல்).

பெரும் வரி வழக்குகளில் தீர்ப்பு காண பல்லாண்டுகள் ஆகும் மற்றும் பன்னாட்டுக் குழுமங்கள் நினைத்தால் நீதிமன்றத்திடம் சென்றிடும். இச்சிக்கல்களுடன் இணைந்தவை என்ன எனில் பல நாடுகளது பொது எண்ணம் ஆனது (அண்மைக் காலம் வரை) பன்னாட்டுக் குழும வணிகங்களை ஈர்ப்பதே வரி தவிர்ப்புக்காகப் போராடுவதைவிட முக்கியம் என்பதால் சிக்கல் வளர்ந்து வருகிறது.

வரிப்புகலிடத்தால் இன்னொருபயன்:ரகசியம். ஊழலுக்கான பணம் திட்டமிட்ட குற்றத்தால் வந்தவை மற்றும் பெரும் பணக்காரர்களது வரி தவிர்ப்பு என பனாமா பேப்பர்ஸ்போல ஊடகம் வெளிப்படுத்துவதுபோல் அநாமதேயக் குழுமங்கள் ( இவற்றில் முதலாளியின் பெயர் பொதுமக்களுக்குத் தெரியவேண்டியதில்லை) என்பன பெரும் அளவு ஊழல் திட்டங்களில் பொதுவான பங்கு வகிப்பது. ஊழல் ஊழியர்கள் தங்களது முறையற்ற லாபத்தை மறைக்கவும் சில கார்ப்பரேட்கள் லஞ்சம் கொடுத்ததை மறைக்கவும் பயன்படுகின்றன.

கார்ப்பரேட் லஞ்சப் பழக்கம் எப்போதுமே தொழிலாளர்களுக்குத் தீமையானது. அவை ஒப்பந்தங்களை பெற்றுத் தந்தாலும். ஏனெனில் தனியாரது சொந்த நலனுக்காகப் பொதுப் பணி ஊழியர்களிடம் வேலை வாங்குகிறது. பொதுமக்களுக்கான பணிக்காக அல்லாமல் என்பதோடு சட்ட அமைப்பைத் தரம் தாழ்த்துகிறது. கார்ப்பரேட்கள் ஊழலுக்குச் செலவிட்ட பணத்தைத் தங்கள் பணிக்காக விலை நிர்ணயிக்கும்போது விலையை அதிகமாக்கிவிடும்.

# வரிப் புகலிடமானதை களைதல் தொழிலாளர்களுக்கு ஏன் தொடர்புடையது?

- கார்ப்பரேடகளும்  பெரும் பணக்காரர்களும் வரிப் புகலிடத்தைத் தாங்கள் செலுத்த வேண்டிய வரியைத் தவிர்க்கப் பயன்படுத்துவதால் நாட்டின் வருமானம் தடுக்கப்பட்டு தொழிலாளர்களுக்கும் குடும்பங்களுக்கும் தேவைப்படும் பொதுப் பணிக்கான வருவாய் குறையும்.

- வரிப் புகலிடம் வரி அமைப்பை அசங்கியப்படுத்தி. அதன் ரகசியத்தன்மை ஊழல், திட்டமிட்ட குற்றங்களை ஊக்குவிப்பதால்- அதனால் வரும் பணம் மறைக்கப்படலாம்.

- கார்ப்பரேட்கள் வரிப் புகலிடத்திற்குப் பணத்தை மாற்றிவிட்டு தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்கையில் பணம் இல்லை என்று கூற இயலும்.

# இன்றைய முன்னேற்றம்

பல பத்தாண்டுகளாகவே வரிப் புகலிடச் சிக்கல் வளர்ந்துவருகிறது. ஓஇசிடி ( பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் முன்னேற்றத்திற்கான நிறுவனம்) 1998க்குப் பின்னர் இச் சிக்கல்களைக் களைய மேற்கொண்ட முயற்சி பெரிதும் பயனற்றுப்போனது காரணம் அமெரிக்காவின் எதிர்ப்பு.

ஓஇசிடியில் அண்மைய 2013-16இலிருந்து பிஇபிஎஸ் ( அடிப்படை அரிப்பு மற்றும் லாப மாற்றம்) எனப்படும் திட்டத்தின்போது அரசுகள் கடுமையாக இருக்க ஊக்குவிக்கப்பட்டது. ஆயினும் பிஇபிஎஸ் முயற்சிகளில் விளைவு (அதன் நூற்றுக்கணக்கான புது வழிகாட்டி) எல்லாம் சுருண்டுவிட்டன காரணம் அவை நடைமுறையில் கடினமானவை. வரி தவிர்ப்புக் கட்டமைப்பின் வேரில் உள்ள சிக்கலைத் தீர்க்காமல் உள்ளன ( முன்னுரைச் சுருக்கம் காண்க. கார்ப்பரேட்களது வரிகள் ஏன் சீர்திருத்தப் படவேண்டும்?)

பிஇபிஎஸ்ஸின் செயல்பாடுகளில் ஏற்கப்பட்ட தீர்வுகளை நம்பமுடியாத சில நாடுகள் தங்கள் விருப்பப்படி பல வகைகளில் அணுகின. இங்கிலாந்துடன் ஆஸ்திரேலியாவும் சமீபத்தில் திருப்பிவிடப்பட்ட லாபங்கள்மீதான வரிகள் என்று ஒன்றை உருவாக்கி வரிப் புகலிடத்தில் லாபங்களை மறைக்கும்  கார்ப்பரேட்களைத் தடுத்தன. 2020 தொடக்கம்முதல் நெதர்லாந்து பிற வரிப் புகலிடத்தில் செலுத்தப்படும் தொகைக்கு அதிக விகிதத்தில் வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளது. முரண்பாடு என்னவெனில் இவற்றில் சில நாடுகள் தங்கள் சொந்த குறைந்தபட்ச வரித் திட்டங்களைக் காக்க முயல்கின்றன. கார்ப்பரேட்களது வரிப் புகலிடத்தில் நெதர்லாந்து உலகின் மிகப் பெரிய ஒன்று. இங்கிலாந்தும் கடல்கடந்த வரிப் புகலிடத்தைக் கொண்டுள்ள தன் துணைநிறுவனங்கள் மற்றும் பிரதேசங்களது பெரும்பங்கைக்கைக்  களைவதில் மெல்ல இயங்குகின்றன.

நாடுகளிடையே, தங்கள் குடிமக்களது சொத்துகள்பற்றிய தகவல்களைப் பரிமாறுவதில் முன்னேற்றம்- வரிப் புகலிடம்- உட்பட உள்ளது( சுருக்க உரை 6 காண்க). சில நாடுகள் குழுமங்கள் தங்களது பயன்பெறும் கடைசி நிலை முதலாளிகளது தகவல்களைப் பொதுப் பதிவுகளில் வெளியிடும்படிக் கோரத் தொடங்கி உள்ளன. ஆயினும் எந்த வரிப் புகலிடமும் இதுவரை இதைச் செய்யவில்லை. ( சுருக்க உரை 7 காண்க: குழுமங்கள், அறக்கட்டளைகள் மற்றும் நிறுவனங்களது பயன்பெறும் முதலாளிகள்பற்றிப் பொதுவில் வெளியிடல்)

பல நாடுகள் கறைபடிந்த வரிப் புகலிடப் பட்டியல்கள் ஐரோப்பியப் யூனியன்போல் கொண்டுள்ளன. ஆனால் இவை பெரிதும் அரசியல் ஆக்கப்பட்டுப் பயனற்றுப்போகின்றன. வரிப்புகலிடக்  கறைப்பட்டியல் வலுவாகவும் புறநிலையாகவும் வரையறுக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் அவை அரசியலுக்காக ஊக்கப்படுத்தப்பட்ட அபத்தங்கள் ஆகிவிடும்.

எடுத்துக்காட்டாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கறைப் பட்டியல் 12 நாடுகள்  அல்லது பிரதேசங்கள் மட்டுமே  2017 இடையே கொண்டுள்ளது. இந்தப் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சொந்த வரிப் புகலிட மாநிலங்கள் மற்றும் பெரிய வரிப் புகலிடமான கரீபியன் விடப்பட்டுள்ளது. கரீபியனது வரிப் புகலிடம் கொக்கியிலிருந்து விடுபட்டதாகும். மாற்றாக வலுவற்ற மெல்ல நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தங்கள் பன்னாட்டுக் குழுமங்கள் கடல்கடந்து லாபங்களை மாற்றக் கொஞ்சம் சிக்கலானவை. ஆனால் ஒட்டுமொத்தமாக



அவற்றை நிறுத்த சீர்திருத்தங்கள் கொண்டுள்ளன.

பல வரிப் புகலிடச் சீர்திருத்தங்களை முழுவதுமாகத் தடுக்க முடியாது என்பதால் அவர்களது புது உத்தி மாற்றத்தைக் தருவதாகக் கூறிடும். ஆனால் எவ்வளவு தள்ளிப்போட முடியுமோ அவ்வளவு தள்ளியபின். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தின் கடல்கடந்த பிரதேசங்கள் பொதுப் பதிவேடுகளுக்குக் குழுமத்தின் கடைசிநிலைச் சொந்தக்காரர்களுக்காக ஒப்புக்கொண்டுள்ளன. ஆனால் 2023க்குப் பின்புதான். இதனிடையே பொது வரி வருமானம் உலகளவில் இன்னும் இழக்கப்படுகின்றன.

2019ஐப் பொறுத்தவரை ஓஇசிடி உலகளவில் குறைந்த பட்ச நடைமுறைக்கு ஏற்ற வரி விகிதத்தை நோக்கி மேலும் சீர்திருத்தங்களை எண்ணியுள்ளது. இதன்படி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் உள்ள கார்ப்பரேட்கள் மிகக் குறைவான விகிதத்தில் வரி விதிக்கப்பட்டோ அல்லது வரியே இல்லையோ பின் இன்னொன்றும் அதைக் குறைந்த பட்ச வரி விகிதம் உலகளாவிய குறைந்த பட்ச வரி விகிதமானது இங்கிலாந்தின் வர்ஜின் தீவுகள் கேமன் தீவுகளது வரியே இல்லாத வரிப் புகலிடங்களை அச்சுறுத்தும். குறைந்த வரியுடைய பகுதிகளான லக்சம்பர்க் தங்கள் விகிதங்களை அதிகரிக்கும் முறையைக் கடைப்பிடித்து குறைந்தபட்ச விகிதத்திற்குக் கொண்டுசெல்லும்.

உலகளாவிய குறைந்தபட்ச நடைமுறைக்கு ஒத்த வரி விகிதமானது வரி தவிர்ப்பு, பொதுவாக மிகக் குறைந்த வரி விதிப்புக்கு எதிரான வலுவான ஆயுதம் ஆகும். .ஆயினும் வலுவற்றபடி வடிவமைக்கப்பட்ட அணுகுமுறை பெரும் வேறுபாட்டைத் தராது. எடுத்துக்காட்டாக, குறைந்த பட்ச விகிதம் குறைவாக இருந்தாலோ பல விலக்குகள் கொண்டிருந்தாலோ மேலும் நிறைய வரிகளைச் சேர்க்காமல் மாறாக விகிதாசாரத்தில் இப்போது அதிக நாடுகளிலும்கூடக் குறைவாக ஆக்கும். அதாவது பன்னாட்டுக் குழுமங்கள் இனிமேலும் வட்டியின்மையை அனுபவிக்காது. ஆனால் ஆகக் கூடி இப்போது கட்டும் வரியைவிட அதிகமாகக் கட்டாது. இதனால் குறைந்தபட்ச விகிதத் திட்டம் எவ்வாறு வேலை செய்கிறது என்று அறிதல் மிக முக்கியம். குறைந்தபட்ச விகிதம் விதித்தாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் அரசியல்சார்ந்த தகராறு இருக்கும். ஏன் என்றால் சில குழுமங்கள் அதைத் தவிர்க்க முயலும்.




**12**
ஐரோப்பிய ஒன்றியத்தின் கறைப் பட்டியலில் உள்ள வரிப் புகலிட எல்லைகளது எண்ணிக்கை.

**64**
வரி நீதி நெட்வொர்க் கார்ப்பரேட் வரிப் புகலிட அட்டவணை உள்ள எல்லைகளது எண்ணிக்கை!




# தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கும்

## ஏக்ஷோண் வரி மற்றும் ஒட்டுமொத்த பேரம்

2017 இல் ஏக்ஷோண் மொபில் & யுஜிஎல்/ சிஜஎம்ஜசி ஆஸ்திரேலிய வாயுத் தொழிலாளர்களது கூலியை 40% வரையும் நிபந்தனைகள் மற்றும் படிகள் நீக்கி மற்றும் தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்தது.

விளைவு 700 நாட்கள் நீடித்த வேலைநிறுத்தம் ஈடுபட்ட சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள், குழுமங்களது வரி விதிப்புகளை ஆராயும் தங்கள் மறியல் வியூகத்தின் முக்கியமான அம்சமாகக் கொண்டிருந்தது.

பில்லியன் $ கணக்கில் இச் சக்திக் குழுமங்கள் வரி ஏய்ப்பு செய்தமை போராட்டத்தில் வெளிப்பட்டது. இது ஆஸ்திரேலிய அரசு வளக் குழுமங்களது வரிகளை உயர்த்தும்படி அழுத்தம் தருவதில் பெரும்பங்கு ஆற்றியது. இது பொதுமக்கள் யுஎஸ் $ 4 பில்லியன் அதிக வருவாய் பெற வழி செய்ததுடன் நிறைய வர இருக்கிறது.

தொழிற் சங்கம் அரசு கார்ப்பரேட் வரி ஏய்ப்பு செனட் விசாரணையை மீண்டும் செய்ய வைத்தது. ஏக்ஷோண் மொபில் தன் உரிமை நெதர்லாந்தில் உள்ள போலி நிறுவனத்திடம் உள்ளதென்று ஒப்புக்கொள்ளவைக்கப்பட்டது. அப்போலி நிறுவனம் பஹாமாஸ் வரிப் புகலிடத்தில் உள்ள இன்னொரு பிரபல குழும நிறுவனத்தின் உரிமை என்பது தெரிந்தது.

உலகுமுழுவதும் சிக்கலைப் பரப்பியதால் அவர்களது போராட்டத்திற்குப் பிற தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களது ஆதரவு, ஒற்றுமை மற்றும் பரப்புதல் கிடைத்ததில் அது குழுமத்திற்கு அழுத்தத்தை அதிகரித்தது.

**அதில் ஈடுபட்ட தொழிலாளர்களில் ஒருவரான ட்ராய் கார்ட்டர் கூறியது:**

**"எங்கள் முதலாளிகளால் எங்கள் கூலி அநியாயமாகக் குறைக்கப்பட்டது. ஆனால் எங்கள் தொழிற் சங்கம் நடத்திய ஆய்வு, மில்லியன் கணக்கில் குழுமத்தின் வழியாக வரிப் புகலிடத்திற்குச் சென்றதைக் காட்டிற்று. இந்த போராட்டங்கள் தொடர்புடையன என்று தெளிவானது."**

ஜூலை 2019 இல் தொடர்புடைய தொழிற் சங்கங்கள் அனுமதித்த ஒட்டுமொத்த ஒப்பந்ததிற்கு பேச்சுவார்த்தைக்கு குழுமங்களை சம்மதிக்க வைத்தன.

தொழிற் சங்க பிரச்சாரத்தில் முக்கிய பங்காக எப்படி வரி கோணத்தை வைத்தன என்று மேலும் அறிய ஆஸ்ட்ரேலியாவில் ஏக்ஷோண் எவ்வாறு தங்கள் பங்கு வரியை செலுத்தின? எனும் அறிக்கையை படிக்கவும்.



# என்ன நடக்க வேண்டும்?

பல நாடுகள் ஏற்கனவே வரிப் புகலிடத்திற்கு எதிராகச் சட்டங்களைக் கொண்டிருந்தாலும் அவை பொதுவாக வரி அதிகாரிகளால் கார்ப்பரேட் லாபங்களை கடல்கடந்து மாற்றப்பட்டதை நிறுவும் பொறுப்பைக் கொண்டுள்ளமை பெரிதும் கடினமானது.

வரிப் புகலிடத்திற்குச் செல்லும் அனைத்துத் தொகைகளும் வரி கட்டுபவர்கள் மற்றொரு முனையில் அதற்கு வரி கட்டப்படுவதாக நிரூபித்தாலன்றி வரி விதிக்கப்படும் எனும் சட்டங்களால் வரிப் புகலிடத்தைப் பயன் படுத்தலைத் தவிர்க்கும். அத்தகைய சட்டங்கள் ஓஇசிடி அல்லது பிற முக்கியமான நிறுவனங்களான ஐஎம்எஃப் போன்றவற்றால் இப்போதும் மும்முரமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

1. தொழிற்சங்கங்கள் தங்கள் அரசுகளிடம் கோர வேண்டியவை:

- வரிப் புகலிடம் செல்லும் அனைத்துத் தொகைக்கும் அதிக வரிகள் தானாகவே கட்டப்படும்படி விதிக்க வேண்டும். இதனால் பணம் அல்லது சொத்தினை மாற்றுவது லாபகரமானதாக இருக்கும்படி செய்யவேண்டும்.
- கார்ப்பரேட்கள் தங்கள் வரிப் பட்டியலில் ( வட்டி கட்டிய தொகை, ராயல்டி, கட்டணங்கள்) என்று எந்தத் தொகையையும் வரிப் புகலிடத்தில் அவை தொடர்புடைய குழுமங்களிடம் கூட்டப்படும்-. கழிப்பதைத் தடுக்க வேண்டும்.
- பொது மக்களுக்கான பணிதொடர்பான ஒப்பந்தங்களை வரிப் புகலிடம் பயன்படுத்தும். குழுமங்கள் ஒப்பந்தப் புள்ளியில் போட்டியிடத் தடை செய்க அல்லது குறைந்தபட்சம் எந்த நாட்டின் ஒப்பந்தமோ பொதுப் பணத்தால் பெற்ற லாபங்களைக் கணக்கில் காட்டப்பட்டு வரி விதிக்கப்பட்டது என்பதையாவது உறுதி செய்க.
- உலகின் அனைத்து அரசுகளும் தங்கள் குடிமக்கள் பிற நாடுகளில் வைத்துள்ள சொத்துகள்பற்றி அவ்வப்போது தெரிவிக்கவேண்டும். இவ்வாறு தகவல்களை பிற நாட்டுக்குத் தெரிவிக்க முயலாத அரசுக்கு இப்போதைக்கு விலக்களிக்க வேண்டும்.
- எல்லா நாடுகளும் பிரதேசங்களும் தினம் கடைசிநிலைப் பயனாளிகள் குழும முதலாளிகள் மற்றும் பிற குழுமத்தின் சொத்துக்களை மறைக்கும் அறக்கட்டளைகள் போன்றவற்றையும் பதிவு செய்யும் பதிவேடுகளுக்கு வற்புறுத்த வேண்டும்.
- நாட்டின் வரி அதிகாரிகளுக்குப் போதிய வளங்கள் மற்றும் அரசாங்க ஆதரவு தரவேண்டும்.



# தொழிற் சங்கங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

## உகாண்டா : வரிப் புகலிடத்துடன் உள்ள தொடர்பை வெளிப்படுதுத்தல்

உகாண்டா தொழிற் சங்கங்கள் அரசு வெளிநாட்டு குழுமங்களிடம் தந்து தனியார் மயமாக்கலை தடுக்கவும் குழுமங்களின் வரி ஏய்ப்பால் பொது வருவாய்க்கு ஏற்படும் மோசமான விளைவுகளையும் தொடர்ந்து எதிர்த்து வந்தன. பன்னாட்டுப் பொதுப் பணிகள் (பிஎஸ்ஐ) உடன் இணைந்து நடத்திய ஆய்வில் உறுப்பினர்கள் இச் சிக்கல்களுக்கிடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்தி நடவடிக்கைகளை முறியடித்தன.

நிதி வெளிக் கொண்டு வருதலும் - வேலை செய்தல். ஒரு பத்திரிகையாளரின் பயிற்சி நிறுவனம்- எப்படி இங்கிலாந்து தனியார் ஈக்விட்டிக் குழுமம் எக்டிஸ் தன் முதலீட்டுக்காக எவ்வாறு மொரிஷியஸில் வரிப் புகலிடமான உமேமே குழுமத்தைப் பயன்படுத்தியது என்று வெளிப்படுத்தியது. மொரிஷியஸில் நடைமுறையில் உள்ள கார்ப்பரேட் வரி விகிதம் 3% உகாண்டாவில் 30% . எக்டிஸ் என்று இங்கிலாந்தின் காமன்வெல்த் முன்னேற்றக் குழுமத்தின் பகுதியாக இருந்தது இங்கிலாந்தின் பன்னாட்டு முன்னேற்றத் துறை ( சிடிசி) யின் ஐயத்துக்குரிய முதலீட்டுக் குழுமம். பன்னாட்டு முன்னேற்றத் துறை ( சிடிசி) தனியார் மயமாக்கல்- இங்கிலாந்து கார்ப்பரேட்களது நலனுக்காக- ஊக்குவித்தது.

உமெமெ தலையீட்டால் ஏக்டிஸ் லாபமாக $ 100 மில்லியனுக்கு மேல் பெரும் தொகை கிடைத்தது. அவ்வளவு பெரிய லாபங்கள் உகாண்டாவில் வரி விதிக்கப் படாமல் இருந்திருக்கவும்- லாபங்களை ஈட்டிய நாடு- ஆனால் மொரிஷியஸில் வரி விதிக்கப்பட்டிருக்கலாம். இதன் பொருளாவது பொதுமக்கள வருவாய் $ 38 மில்லியனுக்குமேல் இழப்பு; நாட்டின் மருத்துவ நிதிநிலை அறிக்கையில் 6% .

உகாண்டா வரித்துறையிடம் இச்சிக்கலை எடுத்துச் சென்றதும் அரசு எக்டிஸ் வரி அலுவல்களை மீண்டும் ஆராய்ந்தது. தனியார் மயமாக்கலுக்கும் வரி ஏய்ப்புக்கும் இடையே உள்ள தொடர்பை மேலும் அறிய பபொபவின் அறிக்கை: தனியார் லாபங்களும் பொது மக்களது பணமும்- படிக்கவும்.

# மேலும் தகவல்கள்

## சிஐசிடிஏஆர்

கடல்கடந்த வரி தவிர்ப்பு பற்றிய நிகழ்வுகளை அறிய சிஐசிடிஆர் பார்க்கவும். சிஐசிடிஏஆர் தொழிற் சங்கங்களது ஆதரவுடன் உலகளாவிய ஆய்வு மையம்-தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் உதவியாக கார்ப்பரேட் வரி தவிர்ப்பு ஆய்வுகள், பன்னாட்டுக் குழுமங்களது வரி நடவடிக்கைகள் எவ்வாறு தொழிலாளர்களது வாழ்வையும் சமுதாயத்தையும் பாதிக்கிறது.

Centre for International Corporate Tax Accountability and Research

வரிபற்றிய கோணத்தில் உங்கள் கார்ப்பரேட் பிரச்சாரம் பயன் தரும் எனில் அல்லது உங்கள் வரிப் பிரச்சாரம் கார்ப்பரேட் எடுத்துக்காட்டுகள் வேண்டும் எனில் தொடர்பு கொள்க: jason.ward@cictar.org .

இணைய தளம்: www.cictar.org

tax justice network

## வரி நீதி நெட்வொர்க்

வரி நீதி நெட்வொர்க் ஆனது சுதந்திரமான பன்னாட்டு நெட் வொர்க். ஆய்வு ஆராய்ச்சி மற்றும் ஆதரவு என்று பன்னாட்டு வரி மற்றும் நிதி ஒழுங்கு- வரிப் புகலிடம் உள்ளிட்டவற்றை நோக்கமாய்க் கொண்டுள்ளது. அவற்றை இணைய தளம் புதிய ஆய்வு மற்றும் தொடர்பான செய்திகள் குடியுரிமைச் சமுதாயம் பயன்படுத்தும் வகையில் வரி நீதிக்காகப் போராடுகிறது.

இணைய தளம்: www.taxjustice.net

இந்தப் பதிப்பு உருவாகக் காரணமான ஃப்ரெட்ரிக் எபேர்ட் ஸ்டிஃப்டங் அவர்களது தாராளமான ஆதரவுக்கு நன்றி:
WWW.FESDC.ORG

PUBLIC SERVICES INTERNATIONAL

45 AVENUE VOLTAIRE, BP 9
01211 FERNEY-VOLTAIRE
CEDEX, FRANCE

TEL: +33 4 50 40 64 64
E-MAIL: PSI@WORLD-PSI.ORG

WWW.WORLD-PSI.ORG

பன்னாட்டுப் பொதுப் பணிகள் ஆனது உலகளாவிய தொழிற் சங்கங்களது சம்மேளனமாக, 163 நாடுகளில் பொதுப் பணி செய்யும் 20 மில்லியன் ஆண், பெண் தொழிலாளர்களுக்கான முகவராக உள்ளது. பன்னாட்டுப் பொதுப் பணிகள் மனித உரிமைகளுக்காகவும் சமூக நீதிக்கு ஆதரவாகவும், தரமான பொதுப் பணிகளை மேம்படுத்த இயங்குகிறது. பன்னாட்டுப் பொதுப் பணிகள், ஐக்கிய நாடுகள் அமைப்பு போல், தொழிலாளர்கள், குடியுரிமைச் சமூகம் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து இயங்குகிறது.